முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

அ.வ.எண்.199/2021

2026–ம் வருடம் ஜனவரி திங்கள் 23–ம் நாளன்று பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

பெயர்.	: கோகுலக்கண்ணன் நடராஜன்	**தொழில்**	:
த/பெ.	:	**வட்டம்**	:
முகவரி	:	**மதம்**	:
ஜாதி	:	**வயது**	:

முதல் விசாரணை:–

நான் இவ்வழக்கில் 1 ஆம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். கடந்த 30.04.2020 ஆம் தேதிய 3 ஆம் மற்றும் 4 ஆம் பிரதிவாதி கொடுத்த தடை மனு பி.வா.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2017 முதல் 2024 வரை வழக்கு சொத்தின் வழிகாட்டி மதிப்பு பி.வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 26.05.2020 ஆம் தேதிய குளித்தலை காவல் நிலையம் வழங்கிய புகார் ஏற்பளிப்பு இரசீது CSR.No.309/2020 பி.வா.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 31.03.2011 ஆம்

தேதிய பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் (ஆவண எண்.1024/2011) பி.வா.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 03.09.2020 ஆம் தேதிய 8 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வில்லங்க சான்றிதழ் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 20.06.2020 ஆம் தேதிய 2 ஆம் பிரதிவாதி, 1 ஆம் பிரதிவாதி மற்றும் 9 முதல் 11 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 04.05.2020 ஆம் தேதிய 10 ஆம் பிரதிவாதி குளித்தலை காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்ட இரசீது (CSR.No.237/2020) பி.வா.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 02.01.2025 ஆம் தேதிய குளித்தலை காவல் நிலையத்தால் வாதி மற்றும் அவரது மகன்கள் மீது பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை (FIR.No.6/2025) பி.வா.சா.ஆ.9. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.01.23 18:16:18 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.